# மெட்ரோ ரயிலில் 2.41 லட்சம் பேர் 2 நாளில் பயணம்

■ சென்னை

சென்னை அருகே மாமல்லபுரத்தில் பிரதமர் மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங் 2 நாள் சந்திப்பு தமிழக வரலாற்றில் முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.

இதற்காக, பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டன.

இதனால், சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மாநகர பேருந்து சேவையில் பாதிப்பு ஏற்பட்டது. வழக்கம் போல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டதால், மக்கள் அதிக அளவில் பயணம் செய்தனர். கடந்த 11-ம் தேதி 1 லட்சத்து 37 ஆயிரத்து 820 பேர், 12-ம் தேதி 1 லட்சத்து 3 ஆயிரத்து 583 பேர் என கடந்த 2 நாட்களில் மொத்தம் 2 லட்சத்து 41 ஆயிரத்து 403 பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.